II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 180 of 2021**

Deposition of witness for the Respondent / RW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 06.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : S.Rajesh | Caste | : |
| Father's / Husband's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை =

விபத்து குறித்து எனக்கு ஆவணங்கள் மூலமாக தான் தெரியும். எங்கள் நிறுவனத்தில் இருந்து புலன் விசாரணை அதிகாரியை வைத்து புலன் விசாரணை செய்துள்ளோம். அந்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் புலன் விசாரணை அதிகாரி லாரி ஓட்டுனர், உரிமையாளர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதியவில்லை என்றால் சரிதான். மனுதார் முதல் தகவல் அறிக்கையின் ஆங்கில மொழி பெயர்ப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எங்கள் கோப்பில் அது இல்லை. லாரி ஓட்டுனர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் தெரிந்து கொள்ள முயற்சி செய்யவில்லையா என்றால் அதை பற்றி தெரியாது. விபத்து சமயத்தில்லாரிக்கு எங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட காப்பீடு நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். லாரி ஓட்டுனர் மீது தான் குற்ற பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டு விசாரணையும் நடைபெற்று வருகிறது என்றால் எனக்கு தெரியாது. லாரி ஓட்டுனர் மீது தவறு இல்லை என்று நாங்கள் கூறும் நிலையில் அதற்கான

மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகளிடம் மனு எதுவும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரின் வாகன ஓட்டுனர் தான் காரணம் என்றும் எனவே எங்கள் நிறுவனம் மனுதார்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. மனுதார்கள் 3ம் தரப்பினர் என்பதால் நாங்கள் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் பாலிஸி விதிமுறை உள்ளது.

மறுவிசாரணை இல்லை,